00022

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் **2019/2020**

**EPC1335/ESC1135** – ஆக்கத்திறன், அழகியல்கல்வி மற்றும் கையாளுகை திறன்களின் விருத்தி

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் விரும்பிய மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

---

திகதி : **17/06/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 03.30

---

## பகுதி I

1. கையாளுகை திறன் விருத்தியின் படிகளைத் தருக.
2. முன்பள்ளிகளில் கையாளுகைத் திறனை விருத்தி செய்வதன் நோக்கங்கள் மூன்றினை (03) விபரிக்குக.
3. முன்பள்ளிப் பிள்ளைகளிடத்தில் நுண்ணியக்கத்திறனை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.
4. முன்பள்ளி பிள்ளைகளிடத்தில் பேரியக்கத்திறனை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.
5. முன்பள்ளி வகுப்பறையொன்றில் இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய ஆக்கச்செயற்பாடுகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக.
6. சிறுவர் நாடகங்களில் முகமூடிகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்கக.
7. செயற்பாடுகளுக்கான கதைகளை தெரிவு செய்யும்போது முன்பள்ளி ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்றினை (03) சுருக்கமாக விளக்குக.
8. இளம் பிள்ளைகளிடத்தில் கலை மற்றும் ஆக்கத்திறன்களை ஊக்கப்படுத்தவதற்கான உத்திகள் மூன்றினை (03) குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி II

9.

i. நடனம், சங்கீதம், நாடகம் என்பவற்றை முன்பள்ளி பிள்ளைகளுக்கு ஒழுங்குபடுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் ஐந்தினை (05) பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. "முன்பள்ளி பிள்ளைகளுக்கு சமூகம்சார் நடத்தைகளை விருத்தி செய்வதற்கு கதை கூறல் மற்றும் நாடகங்கள் முக்கியத்துவம் வாய்ந்தன."

மேலுள்ள கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடைகளை பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

10.

i. அழகியல் செயற்பாடுகளை விருத்தி செய்வவதற்கு உபயோகிக்ககூடிய உபகரணங்கள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி பிள்ளைகளின் அழகியல் செயற்பாடுகளை முன்பள்ளி ஆசிரியர் திட்டமிடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய மூன்று (03) செயற்பாடுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. சிறுவர் சித்திரம், ஆக்கச் செயற்பாடு என்பவற்றுக்கு பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) கழிவுப் பொருட்களின் பெயர்களை பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

ii. சிறுவர் சித்திரம், ஆக்கத்திறன்களுக்கு இயற்கை மற்றும் கழிவுப் பொருட்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினையும் கழிவுப் பொருட்களை பயன்படுத்தி சிறுவர் சித்திரம், ஆக்கச் செயற்பாடு என்பவற்றை எவ்வாறு செய்ய முடியும் என்பதனையும் பகுப்பாய்வு செய்க.

(15 புள்ளிகள்)

12.

i. முன்குறியீட்டு பருவ பிள்ளையின் பண்புகளை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் ஆக்கச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு பெற்றோர் எவ்வாறு உதவ முடியும் என்பதற்கான ஐந்து (05) வழிகளை முன்வைத்து விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

i. பின்வருவனவற்றுள் ஏதாவதொரு தலைப்பில் சுருக்கமாக கதை ஒன்று எழுதுக. "காற்று", "வானம்", "பட்டம்"

(05 புள்ளிகள்)

ii. இக்கதை மூலம் நீங்கள் அடைவதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் ஐந்தினை (05) தருக.

(05 புள்ளிகள்)

iii. இந்நோக்கங்களை அடையுமுகமாக இக்கதையை நீங்கள் எவ்வாறு கூறுவீர் என்பதை படிப்படியாக விளக்குக.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*